**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO. 53 of 2019**

| | |
|---|---|
| Name: தட்சணாமூர்த்தி | Caste: |
| Father's Name: துரைவேல்<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tr.Sivaraj, Gr.III, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 10.06.2026 | |

**10.06.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 3.55 PM**

**வா.சா.1. – குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் இந்த வழக்கின் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி என்னுடைய மனைவி ஆவார். இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன காரணத்திற்காக வாதி என் மீதும் எனது மனைவி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மனை பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண்.258/22 ற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் இந்த வழக்கை சர்வே எண். 258/22 ற்காக தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து கிராம நத்தம் வகைப்பாட்டை சார்ந்தது என்றால் சரிதான்.

1998 ல் எனக்கு சர்வே எண். 258/23 ற்கு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே சமையத்தில் தான் வாதியின் தந்தை காசிக்கும் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு கொடுக்கப்பட்ட விஸ்திரணம் 70 ச.து.மீட்டர் என்றால் சரிதான். எனக்குகொடுக்கப்பட்ட விஸ்திரணம் 21 ச.து.மீட்டர் என்றால் சரிதான்.

70 சதுர மீட்டருக்கு தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தை வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வீட்டு மனை சம்பந்தமாக 2019 ம் ஆண்டே எங்களுக்குள் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அந்த பிரச்சனை தொடர்பாக சாலவாக்கம் காவல் நிலையம் சென்றுள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி வீடு கட்ட முயற்சித்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கு பக்க எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு திசைகள் தெரியாது. வாதியின் தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் காலி இடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் நான் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். கிழக்கு பக்கமும் காலிமனை உள்ளது என்றால் சரியல்ல. கூரைவீடு உள்ளது.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் 38/2023 என்ற அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 4.10 PM**

**Sd/R.கிருத்தியா,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**

**உத்திரமேரூர்.**